**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 511/2025**
**வழக்கு சாட்சி PW–7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கிபாண்டி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இசக்கிமுத்து | தொழில் | : | ேஹாட்டல் |
| கிராமம் | : | செல்லபிள்ளையார்குளம் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Saturday of 04.07.2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் செல்லபிள்ளையார்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ேஹாட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஏ.பி.நாடானூர் விலக்கில் வைத்து போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.06 16:14:34 +0530